## பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் - 2014

பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அமெரிக்க ஏற்றுமதி/ இறக்குமதி வங்கிக்கும் இலங்கையின் ஹற்றன் தேசிய வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஜுலை 01 ஆந் திகதிய ஏபீ086903எக்ஸ்எக்ஸ் ஆம் இலக்க மற்றும் 2013 நவம்பர் 06 ஆந் திகதிய 3294 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

### 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் படி, முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் நீர் வழங்கல் வசதிகளை நிர்மாணித்து விரிவாக்கம் செய்வதன் மூலம் பாதுகாப்பான குடி நீர் வசதியை வழங்கி அதன் மூலம் அப் பிரதேசத்தில் வாழ்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் வறுமையை குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 91.37 மில்லியனிற்கு சமனான ரூபா 11,809.51 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 64.89 மில்லியனிற்கு சமனான ரூபா 8,356.53 மில்லியன் அல்லது 70.77 சதவீதம் அமெரிக்க ஏற்றுமதி/ இறக்குமதி வங்கியாலும் ஐ.அ.டொலர் 9.26 மில்லியனிற்கு சமனான ரூபா 1,213.98 மில்லியன் அல்லது 10.28 சதவீதம் இலங்கை ஹற்றன் தேசிய வங்கியாலும் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகையான ஐ.அ.டொலர் 17.22 மில்லியனிற்கு சமனான ரூபா 2,239 மில்லியன் அல்லது 18.95 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2012 திசெம்பரில் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீது செலுத்தப்பட்ட ரூபா 20.72 மில்லியன் தொகையான சுங்கத் தீர்வைகள் நடைபெறும் வேலைகளின் கீழ் தவறுதலாக காட்டப்பட்டிருந்தது

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

நிதிப் பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் செயற்திட்ட செயற்பாடுகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| அமெரிக்க ஏற்றுமதி-இறக்குமதி வங்கி | 64.89 | 8,356.53 | 1,000 | 12.90 | 1,680 | 12.90 | 1,680.00 |
| ஹற்றன் தேசிய வங்கி | 9.26 | 1,213.98 | - | - | - | 9.26 | 1,213.98 |
| இலங்கை அரசாங்கம் | 17.22 | 2,239.00 | 100 | 0.65 | 85 | 0.86 | 111.84 |
| | 91.37 | 11,809.51 | 1,100 | 13.55 | 1,765 | 23.02 | 3,005.82 |

பௌதீக இலக்குகளை மேவுவதற்காக செயற்திட்டத்தால் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் விலகல்களை இனங்காண்பதற்கும் தேவையான மாற்று நடவடிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கும் எந்த நுட்பமுறையும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

-------------------------------------

ஒப்பந்த உடன்படிக்கை 2012 திசெம்பர் 25 இல் ஒப்பந்தகாரருடன் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2014 மார்ச் இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2014 ஒக்தோபர் 24 இல் ஒப்பந்த உடன்படிக்கை திருத்தப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 19.2 சதவீதம் மற்றும் 25.3 சதவீதமாக இருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியளித்தல் மற்றும் அமுலாக்கல் நோக்கங்களிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் உப கடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் உப கடன் மீதான வட்டி கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டம் அதன் நிர்வாக வேலைகளிற்காக போதுமானளவு பதவியணியினரை ஆட்சேர்த்திருந்த போதிலும் செயற்திட்டப் பதவியணியினரின் சம்பளங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் 20 சதவீத மேந்தலைகள் செயற்திட்டத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. 2014 வரை செயற்திட்டத்தால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு அவ்வாறு செலுத்தப்பட்ட மேந்தலைச் செலவினம் ரூபா 3.83 மில்லியன் ஆகும்.

(இ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், காணி சுவீகரித்தல் நோக்கங்களிற்காக 2014 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தால் உரிய பிரதேச செயலகங்களிற்கு ரூபா 19.75 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் சுவீகரிக்கப்பட்ட காணியின் உரித்துரிமை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு 2015 திசெம்பர் 31 இலும் கூட மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சர்வதேச மாநாடு ஒன்றை நடாத்துவதற்கு செலவிடப்பட்ட ரூபா 1.72 மில்லியன் தொகை மற்றும் திறப்பு விழா ஒன்றின் மீது செலவிடப்பட்ட ரூபா 1.26 மில்லியன் வேறு தொகை என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் தொடர்புபட்டிருக்கவில்லை.

(உ) செயற்திட்ட செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்காத தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பதுளை பிராந்திய உதவி நிலைய அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்திற்கான ரூபா 7.18 மில்லியன் தொகை ஆலோசணைக் கட்டணம் செயற்திட்டத்தின் கிரயமாக அறவிடப்பட்டிருந்தது.